# 62. தமிழ் நாட்டிற் சினிமா

உருவினையும் ஒலியினையும் ஒன்றாகச் சேர்த்தே
ஒளிபெருகத் திரையினிலே படங்காட்டும் கலையைத்
திருவிளக்கும் நல்லறிஞர், ஐரோப்பியர்கள்
தெரிந்துவெளி யாக்குகின்றார் எனக்கேட்ட நாளில்,
'இருவிழியால் அதுகாணும் நாள் எந்த நாளோ,
என்நாடும் அக்கலையில் இறங்குநாள் எந்நாள்,
இருள் கிழித்துத் தமிழ்நாடாம் நிலவுதனை, உலகின்
எதிர்வைக்கும் நாள் எந்நாள்' என்றுபல நினைத்தேன்.

ஒலி யுருவப்படம் ஊரில் காட்டுவதாய்க் கேட்டேன்,
ஓடினேன்; ஓடியுட்கார்ந் தேன்இரவில் ஒரு நாள்,
புலிவாழும் காட்டினிலே ஆங்கிலப் பெண் ஒருத்தி,
புருஷர்சக வாசமிலாப் புதுப்பருவ மங்கை
மலர்க்குலத்தின் அழகினிலே வண்டுவிழி போக்கி
வசமிழந்த படியிருந்தாள்! பின்பக்கம் ஒருவன்
எலிபிடிக்கும் பூனைபோல் வந்தந்த மங்கை
எழில் முதுகிற் கைவைத்தான்! புதுமை ஒன்றுகண்டேன்!

உளமுற்ற கூச்சந்தான் ஒளிவிழியில் மின்ன,
உயிர் அதிர்ந்த காரணத்தால் உடல் அதிர்ந்து நின்றே,
தெளிபுனலில் தாமரைமேற் காற்றடித்தபோது
சிதறுகின்ற இதழ்போல செவ்விதழ் துடித்துச்

சுவைவாயால் நீயார்என் றனல்விழியாற் கேட்டாள்;
சொல்பதில்நீ என்றதவள் சுட்டுவிரல் ஈட்டி!
களங்க மிலாக்காட்சி, அதில் இயற்கை யெழில்கண்டேன்!
கதைமுடிவில் 'படம்' என்ற நினைவுவந்த தன்றே!

என்தமிழர் படமெடுக்க ஆரம்பஞ் செய்தார்;
எடுத்தார்கள் ஒன்றிரண்டு பத்து நூறாக!
ஒன்றேனும் தமிழர்நடை யுடைபா வனைகள்
உள்ளதுவாய் அமைக்கவில்லை, உயிர் உள்ள தில்லை!
ஒன்றேனும் தமிழருமை உணர்த்துவதா யில்லை
ஒன்றேனும் உயர்நோக்கம் அமைந்ததுவா யில்லை!
ஒன்றேனும் உயர்நடிகர் வாய்ந்ததுவா யில்லை!
ஒன்றேனும் வீழ்ந்தவரை எழுப்புவதா யில்லை!

வடநாட்டார் போன்ற உடை, வடநாட்டார் மெட்டு!
மாத்தமிழர் நடுவினிலே தெலுங்கு கீர்த் தனங்கள்!
வடமொழியில் ஸ்லோகங்கள்! ஆங்கிலப் பிரசங்கம்!
வாய்க்கு வரா இந்துஸ்தான்! ஆபாச நடனம்!
அடையும் இவை அத்தனையும் கழித்துப் பார்க்குங்கால்,
அத்திம்பேர் அம்மாமி எனுந் தமிழ்தான் மீதம்!
கடவுளர்கள், அட்டைமுடி, காகிதப் பூஞ்சோலை,
கண்ணாடி முத்துவடம் கண்கொள்ளாக் காட்சி!

பரமசிவன் அருள்புரிய வந்துவந்து போவார்!
பதிவிரதைக் கின்னல் வரும் பழையபடி தீரும்!
சிரமமொடு தாளமெண்ணிப் போட்டியிலே பாட்டுச்
சிலபாடி மிருதங்கம் ஆவர்த்தம் தந்து

வரும் காதல்! அவ்விதமே துன்பம்வரும், போகும்!
மகரிஷிகள் கோயில்குளம்—இவைகள் கதாசாரம்.
இரக்கமற்ற படமுதலாளிக்கெல்லாம் இதனால்
ஏழைகளின் ரத்தத்தை உறிஞ்சியது லாபம்!

படக்கலைதான் வாராதா என நினைத்த நெஞ்சம்
பாழ்படுத்தும் முதலாளி வர்க்கத்தின் செயலால்,
படக்கலையாம் சனியொழிந்தால் போதுமென என்னும்!
பயன்விளைக்கும் விதத்தினிலே பலசெல்வர் கூடி
இடக்கற்றிச் சுயநலத்தைச் சிறிதேனும் நீக்கி
இதயத்தில் சிறிதேனும் அன்புதனைச் சேர்த்துப்
படமெடுத்தால் செந்தமிழ் நாடென்னும் இளமயிலும்
படமெடுத்தாடும்; தமிழர் பங்கமெலாம் போமே!